**செய்தி வெளியீடு எண் .185** **நாள்: 21.11.2019**

**தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் புதிய மாநில தலைமை தகவல் ஆணையர் பதவியேற்றார்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, (2005-ன் மத்திய சட்டம் 22) -ன் பிரிவு 15 இன் துணைப்பிரிவு (3) ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் திரு ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப.., அவர்களை தமிழக மாநில தகவல் ஆணையத்தில் மாநில தலைமை தகவல் ஆணையராக நியமித்துள்ளார்,

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் முன்னிலையில் திரு ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப.., அவர்கள் மாநில தலைமை தகவல் ஆணையராக இன்று (21.11.2019) ராஜ் பவனில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

திரு. கே.சண்முகம் இ.ஆ.ப.., தமிழக அரசின் தலைமைச் செயலாளர், திருமதி, மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப.., கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (பயிற்சி) மற்றும் டாக்டர் எஸ்.ஸ்வர்ணா, இ.ஆ.ப.., அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலாளர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர், மாநில தகவல் ஆணையர்கள் திரு. எஸ்.செல்வராஜ், திரு. எஸ்.டி தமிழ்குமார், திரு. ஆர்.பிரதாப்குமார், திரு. எஸ்.முத்துராஜ், திரு. ஆர். தட்சிணாமூர்த்தி மற்றும் திரு. ஜி.முருகன், அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

ராஜ் பவன், சென்னை – 22 ஒம்/-

தேதி: 21.11.2019 இணை இயக்குநர் (ம.தொ)

**Press Release No.185** **Date : 21.11.2019**

**New State Chief Information Commissioner to the Tamil Nadu State Information Commission was sworn-in**

The Hon'ble Governor of Tamil Nadu in exercise of the powers conferred by sub-section (3) of section 15 of the Right to Information Act, 2005, (Central Act 22 of 2005), has appointed Thiru. R. Rajagopal, I.A.S., as the State Chief Information Commissioner in the Tamil Nadu State Information Commission.

Thiru. R. Rajagopal, I.A.S., made and subscribed Oath of office before Thiru. Banwarilal Purohit, Hon'ble Governor of Tamil Nadu at Raj Bhavan, Chennai today (21.11.2019).

Thiru. K. Shanmugam, I.A.S., Chief Secretary to Government, Tmt. Meenakshi Rajagopal, I.A.S., Additional Chief Secretary / Director General, RD & Panchayat Raj (Trg) and Dr. S. Swarna, I.A.S., Secretary to Government, Personnel and Administrative Reforms Department were participated. State Information Commissioners Thiru. S. Selvaraj, Thiru. S.T. Tamilkumar, Thiru. R. Pratapkumar, Thiru. S. Muthuraj, Thiru. R. Dakshinamoorthy and Thiru. G. Murugan, Officials and other dignitaries were present.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 21.11.2019 Joint Director (PR)